FORM A
PUBLIC ANNOUNCEMENT

(Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process)Regulations, 2017)

FOR THE ATTENTION OF THE STAKEHOLDERS OF M/S. GOKUL GRANITES PRIVATE LIMITED

1.	NAME OF CORPORATE PERSON	M/S. GOKUL GRANITES PRIVATE LIMITED
2.	DATE OF INCORPORATION OF CORPORATE PERSON	08/06/1987
3.	AUTHORITY UNDER WHICH CORPORATE PERSON IS INCORPORATED/ REGISTERED	REGISTRAR OF COMPANIES, COIMBATORE
4.	CORPORATE IDENTITY NUMBER OF CORPORATE PERSON	U14102TZ1987PTC001979
5.	ADDRESS OF THE REGISTERED OFFICE AND PRINCIPAL OFFICE (IF ANY) OF CORPORATE PERSON	1/52, Brindavan Road, Fairlands, Salem - 636016
6.	LIQUIDATION COMMENCEMENT DATE OF CORPORATE PERSON	12.01.2022
7.	NAME OF THE LIQUIDATOR:	CA Ayyampalayam Venkatesan Arun
	ADDRESS:	"Ram's Court", 10/2, Balaji Nagar I Cross, Advaitha Ashram Road Salem, Tamil Nadu – 636 004
	COMMUNICATION ADDRESS:	"Akshayam", 4th Floor, Old No:4/1, New No: 153-B, Sugavaneswara Street, Salem – 636 004
	EMAIL ADDRESS	gokullpservices@gmail.com (process specific) avarun77@gmail.com (registered mail ID)
	MOBILE NUMBER	9842712336
	REGISTRATION NUMBER OF THE LIQUIDATOR	IP Regn.No: IBBI/IPA-001/IP-P01079/2017-18/11792
8.	LAST DATE FOR SUBMISSION OF CLAIMS	15.02.2022

Notice is hereby given that the M/s. Gokul Granites Private Limited has commenced Voluntaryliquidation on 12.01.2022.

The stakeholders of M/s. Gokul Granites Private Limited are hereby called upon to submit a proof of their claims, on or before 15.02.2022, to the liquidator at the Communication address mentioned against item 7.

The financial creditors shall submit their proof of claims by electronic means only. All other stakeholders may submit the proof of claims in person, by post or by electronic means.

Submission of false or misleading proofs of claim shall attract penalties.

(Sd/-)

Ayyampalayam Venkatesan Arun

Reg No.: IBBI/IPA-001/IP-P01079/2017-18/11792

Date: 17.01.2022

Place: Salem

A.V.Arun

A.V. ARUN, B.Com.,F.C.A.,A.C.M.A.,DISA
IBBI Regn.No: IBBI/IPA-001/ IP-P01079/ 2017-18/11792
Enrolment No: IP/P-01079
INSOLVENCY PROFESSIONAL

சென்னை, பெரும்பாக்கத்தில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு சென்ற, முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் செம்மொழி நிறுவனத்தின் புதிய நூல்களை வெளியிட அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றுக்கொண்டார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மகேசன் காசிராஜன், தமிழ் இணைய கல்விக் கழக இயக்குனர் ஜெயசீலன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரமூர்த்தி, இயக்குனர் பேராசிரியர் சந்திரசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

பெரும்பாக்கத்தில் உள்ள

செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தில் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு

புதிய நூல்களை வெளியிட்டார்

சென்னை, ஜன. 17–

சென்னை, பெரும்பாக்கத்தில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, புதிய நூல்களை வெளியிட்டார்.

செம்மொழி

முன்னாள் முதல்–அமைச்சர் கருணாநிதியின் முயற்சியால், உலகின் மூத்த மொழியாம், சொல் வள மும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழி 2004–ம் ஆண்டு, அக்டோபர் 12–ம் நாள் ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற கருணாநிதியின் கனவினை நிறைவேற்ற, தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் 2006–ம் ஆண்டு இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனத்தின் ஒரு அங்கமாகச் செம்மொழிக்கான நிறுவனமொன்று அமைக்கப் பட்டது.

பின்னர் 2008–ம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகச் சென்னையில் அமையப்பெற்றது.

தனிக்கவனம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல்பழங்காலம் முதல் கி.பி. 6–ம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்நிறுவனம், தமிழ் மொழி ஆய்விலும், அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

செம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித்தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந் நிறுவனம் கொண்டுள்ளது.

பிரதமர் திறப்பு

2007–ம் ஆண்டு சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கத்தில் 16.86 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசின் சார்பில் செம்மொழி நிறுவனத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்நிலத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கட்டிடம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழு தலைவரான முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் பிரதமரால் 12.1.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டிடம் தரைத்தளத்துடன் மொத்தம் நான்கு தளங்களைக் கொண்டுள்ளது. தரைத் தளத்தில் 45,000க்கும் மேற்பட்ட தொன்மையான நூல்களைக் கொண்ட நூலகமும், திருவள்ளுவர் அரங்கம் மற்றும் தொல்காப்பியர் அரங்கம் என இரண்டு கருத்தரங்க அறைகளும் உள்ளன.

மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செயல்பாடுகளை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் சென்று பார்வையிட்டார், ஆய்வு செய்தார். அங்குள்ள நூலகத்தையும் பார்வையிட்டார்.

மேலும், திருவள்ளுவர் அரங்கம் மற்றும் தொல்காப்பியர் அரங்கம், கல்விசார் பணியாளர்கள், நிர்வாகப் பிரிவு அலுவலகங்களைப் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, செம்மொழி நிறுவன ஆய்வுசார் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிறுவனம் மேலும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டிய ஆய்வுகள் குறித்தும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், செம்மொழி நிறுவனத்தின் தொல்காப்பிய ஆய்வு, தெய்வச்சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, தமிழ்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம் உள்ளிட்ட 8 புதிய நூல்களை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றுக் கொண்டார்.

விருதுகள்

மேலும், 2010 முதல் 2019 வரை கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித்தமிழ் விருதுகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விருதாளர்களுக்கு 22.1.2022 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறவுள்ள விழாவில் விருதுகள் வழங்கப்படும் என முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

டெல்லியில் குடியரசு தின அணிவகுப்பு

தமிழக அரசின் அலங்கார ஊர்தி பங்கேற்க அனுமதி இல்லை

சென்னை, ஜன. 17–

ஆண்டு தோறும் குடியரசு தினத்தன்று டெல்லி ராஜபாதையில் நடைபெறும் அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்களின் சார்பில் அலங்கார ஊர்திகள் இடம் பெறுவது வழக்கம்.

ஊர்தி இல்லை

குடியரசு தின நிகழ்வின் அணிவகுப்பில் எந்தெந்த மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் இடம்பெறும் என்பதை மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் குழு தேர்வு செய்யும்.

இந்த ஆண்டுக்கான மையக்கருவாக இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் என்கிற தலைப்பில் அலங்கார ஊர்திகள் இடம் பெறுகின்றன.

குறைப்பு

இந்நிலையில் இந்த அணி வகுப்பில் இந்த ஆண்டு தமிழகத்தின் சார்பிலான அலங்கார ஊர்தி பங்கேற்பதற்கு தேர்வு செய்யப்படவில்லை.

கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பங்கேற்கும் மாநிலங்களின் எண்ணிக்கை 12 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தென்னிந்தியாவில் கர்நாடகாவை தவிர வேறு எந்த மாநிலமும் அணிவகுப்பில் பங்கேற்க தேர்வு செய்யப்படவில்லை.

இடம் பெற

இந்திய விடுதலை போராட்ட வீரர்கள் என்கிற மையக் கருவில் தமிழக விடுதலை போராட்ட வீரர்களான வேலு நாச்சியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை உள்ளிட்ட வீரர்களை சித்தரிக்கும் வகையிலான அலங்கார ஊர்திகள் இடம்பெறும் வகையில் கருத்துரு வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தமிழகத்தின் ஊர்தி பங்கேற்பதற்கு நிபுணர் குழுவால் தேர்வு செய்யப்படவில்லை.

ஏற்கனவே மேற்கு வங்கத்தின் சார்பிலான அலங்கார ஊர்தி தேர்வு செய்யப்படாதது குறித்து பிரதமருக்கு மேற்கு வங்க முதல்–மந்திரி மம்தா பானர்ஜி கடிதம் எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை யொட்டி அவரது உருவபடத்துக்கு பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

எம்.ஜி.ஆர். படத்துக்கு மரியாதை

மறைந்த முன்னாள் முதல் –அமைச்சர் எம்.ஜி.ஆர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு ம.பொ.சி பேரன் முனைவர் பா.செந்தில் ம.பொ.சி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஆன்லைன் வகுப்புக்காக வாங்கிய செல்போனில் பழக்கம்:

பள்ளி மாணவியை கடத்தி 5 மாநிலங்களில் உல்லாசமாக சுற்றிய 'காதல் மன்னன்'

சென்னையில் குழந்தையை பெற்றெடுத்து விட்டு தப்பிச்சென்றவரை சுற்றி வளைத்து பிடித்தனர்

சென்னை, ஜன. 17–

ஆன்லைன் வகுப்புகளுக்காக பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்கு வாங்கி கொடுக்கும் செல்போன்கள் சமீபகாலமாக ஆபத்தில் முடிவது தொடர்கதையாகி வருகிறது.

தேவையில்லாத பழக்கம்

ஆன்லைன் வகுப்புகள் இல்லாத நேரங்களில் செல்போன் மூலமாக தேவையில்லாத தொடர்புகளும், பழக்கங்களும் ஏற்பட்டு வருகிறது.

இதனை பயன்படுத்தி பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற பக்கங்களில் பள்ளி மாணவிகளுடன் பழகும் இளைஞர்கள் அவர்களை தவறான பாதைக்கு அழைத்துச் சென்று விடுகிறார்கள். கடந்த சில நாட்களாகவே ஆன்லைன் வகுப்புக்காக வாங்கப்பட்ட செல்போன் மூலம் ஏற்பட்ட பழக்கத்தால் மாணவிகள் பலரது வாழ்க்கை திசை மாறி சென்றுள்ளது.

ஜிம் மாஸ்டர்

அந்த வகையில் தர்மபுரி மாவட்டத்தில் 10–ம் வகுப்பு மாணவி ஒருவரை காதல் மன்னனாக வலம் வந்த ஜிம் மாஸ்டர் மயக்கி ஏமாற்றி கடத்திச் சென்று இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுபற்றிய பரபரப்பான தகவல்கள் வருமாறு:–

திருப்பத்தூர் மாவட்டம் பொம்மிகுப்பம் கிராமத்தை சேர்ந்தவர் நரசிம்மன். ஜிம் மாஸ்டரான இவருக்கு 2 மனைவிகள். குடும்ப தகராறு காரணமாக இருவரும் பிரிந்து சென்று விட்டனர். நரசிம்மன், பெங்களூருவில் ஜிம் மாஸ்டராக இருந்து வந்தார்.

தொடர்ந்து பேச்சு

இந்த நிலையில் தான் தருமபுரி மதிகோன்பாளையத்தை சேர்ந்த 15 வயதே நிரம்பிய 10–ம் வகுப்பு மாணவியுடன் நரசிம்மனுக்கு பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. கடந்த 2020–ம் ஆண்டு கொரோனா ஊரடங்குகாலகட்டத்தில் தான் நரசிம்மனுக்கும், மாணவிக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுள்ளது. அப்போது மாணவியிடம் நரசிம்மன் இன்ஸ்டாகிராமில் தொடர்ந்து பேசி அவருடன் பழகி வந்ததாக கூறப்படுகிறது.

கடத்தல்

இதையடுத்து கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 5–ந்தேதி, பெங்களூருவில் இருந்து நரசிம்மன் மோட்டார் சைக்கிளில் தருமபுரிக்கு வந்தார். பின்னர் மாணவியை தனியாக சந்தித்து பேசினார். அப்போது திருமணம் செய்து கொள்வதாக மாணவியிடம் நரசிம்மன் தெரிவித்தார்.

இதற்கு முதலில் மாணவி உடன்படாத நிலையில் தனது நேரடி பேச்சு மூலமும் மாணவியை மயக்கி இருக் கிறார். பின்னர் அவரை மோட்டார்சைக்கிளில் கடத்தி சென் றார்.

பெற்றோர் அதிர்ச்சி

இதற்கிடையேவெளியில்சென்றமகள் வீடு திரும்பாததால்பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். பல இடங்களில் தேடி பார்த்தும் கண்டுபிடிக்க முடியாததால் தருமபுரி டவுன் போலீசில் புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இருப்பினும் மாணவியை கண்டுபிடிக்க முடியவில்லை. அவரை கடத்தி சென்ற ஜிம் மாஸ்டர் நரசிம்மன் இருக்கும் இடமும் தெரியவில்லை.

ஐகோர்ட்டு உத்தரவு

இதனால் சென்னை ஐகோர்ட்டில் மகள் மாயமானது குறித்து ஆட்கொணர்வு மனுவை பெற்றோர் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி, 6 மாதத்துக்குள் மாணவியை கண்டுபிடித்து பெற்றோரிடம் போலீசார் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதையடுத்து மாணவி வழக்கு சூடுபிடித்தது. தருமபுரி டவுன் போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை முடுக்கி விடப்பட்டது.

செல்போன் எண்

நரசிம்மனின் செல்போன் நம்பரை வைத்து அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க போலீசார் முடிவு செய்தனர். இதன்படி செல்போன் சிக்னல் மூலம் அவரது நடமாட்டத்தை கண் காணித்தனர்.

இதில் நரசிம்மன், கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக பெங்களூர், சென்னை, கேரளா, விசாகப்பட்டினம் என பல்வேறு ஊர்களுக்கு மாணவியை அழைத்து சென்றது தெரிய வந்தது.

திருமணம்

தர்மபுரியில் இருந்து மாணவியை கடத்தி சென்ற நரசிம்மன் கோவை வழியாக கேரள மாநிலம் திருச்சூருக்கு சென்றுள்ளார். வழியில் நரசிம்மன், மாணவியின் கழுத்தில் தாலி கட்டி திருமணம் செய்துள்ளார். திருச்சூர், கொச்சியில் இருவரும் ஒன்றாக வாழ்ந்துள்ளனர்.

பிறகு அங்கிருந்து மோட்டார் சைக்கிளிலேயே மாணவியை நரசிம்மன் கர்நாடகாவுக்கு அழைத்து சென்றுள் ளார். அங்கு வேலை ஏதும் இல்லாததால், ஆந்திர மாநிலம் திருப்பதிக்கு சென்று, அங்கு சிறிது காலம் மாணவியுடன் அவர் வாழ்ந்துள் ளார்.

கர்ப்பம்

அப்போது மாணவி கர்ப்பமானார். இதையடுத்து செலவுக்காக திருப்பதியில் உள்ள ஒரு வங்கியில் நகையை ரூ.70 ஆயிரத்திற்கு அடகுவைத்துள்ளார். அந்த பணம் செலவான நிலையில் திருப்பதியில் பல்வேறு இடங் களில் செல்போன் திருட்டில் நரசிம்மன் ஈடுபட்டுள்ளார்.

ஒருமுறை பைக் திருட் டில் ஈடுபட முயன்று, போலீசா ரிடம் சிக்கியுள்ளார். பிறகு திருப்பதியில் அடகு வைத்திருந்த நகையை திருப்பினார். அதன்பிறகு நெல்லூர், குண்டூர், விஜயவாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கும் மாணவியை அழைத்து சென்றுள்ளார். அங்கு இருவரும் அறை எடுத்து தங்கியுள்ளனர்.

சென்னையில்

இதன் பிறகு மாணவியை பிரசவத்திற்காக கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் சென்னைக்கு நரசிம்மன் அழைத்து வந்துள்ளார். பள்ளிக்கரணையில் ஆஸ் பத்திரி ஒன்றில் மாண வியை அனுமதித்து பரி சோதனைகள் மேற்கொண் டார்.

பின்னர் மாணவிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு சென்னையில் இருந்து மகாராஷ்டிரா மாநிலம் புனேவுக்கு நரசிம்மன் சென்றுள்ளார்.

மோசடி

சென்னையில் தங்கியிருந்த போது ஆன்லைன் மூலம் சூதாடுவதற்காக ஒரு கடையில் பண பரிவர்த்தனை மேற்கொண்டுள்ளார். பின்னர், அந்த கடை உரிமை யாளரை நம்ப வைத்து, ரூ.1.2 லட்சம் மோசடியிலும் நரசிம்மன் ஈடுபட்டுள்ளார்.

மகாராஷ்டிராவில் சரியான வேலை எதுவும் கிடைக்காததால் அங்கிருந்து தெலுங்கானா மாநிலம் சங்காரெட்டி மாவட்டம் இஸ்னாபூர் கிராமத்துக்கு சென்று தங்கினர்.

இதனிடையே, திருப்பதியில் நகையை அடகு வைத்த போது, கொடுத்த செல்போன் எண் போலீசுக்கு கிடைத்தது. அதை வைத்து மாணவியையும், நரசிம்மனையும் பிடிக்கும் பணியில் போலீசார் தீவிரம் காட்டினர்.

செல்போன் சிக்னலை வைத்து அவரை பின் தொடர்ந்தனர். அப்போது தெலுங்கானா மாநிலம் இஸ்னாபூரில் நரசிம்மன் இருப்பது தெரிய வந்தது. போலீசார் அங்கு செல்வ தற்குள் நரசிம்மன் மாணவி மற்றும் குழந்தையுடன் தப்பிச் சென்று விட்டார்.

சொந்த ஊரில்

இருப்பினும் நரசிம்மனை கண்டு பிடிக்கும் பணியில் போலீசார் இடைவிடாமல் ஈடுபட்டனர். அப்போது சொந்த ஊரான பொம்மிகுப்பத்தில் மாணவியுடன் நரசிம்மன் தங்கி இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து அங்கு விரைந்து சென்ற போலீசார் நரசிம்மனை அதிரடியாக கைது செய்தனர்.

6 மாத குழந்தை

மாணவியையும் அவரது 6 மாத ஆண் குழந்தையையும் போலீசார் மீட்டனர். கடந்த 11 மாதங்களாக மாணவியுடன் குடும்பம் நடத்தி குழந்தையையும் பெற்றெடுத்த நிலையில் நரசிம் மன் மீது போக்சோ சட்டம் பாய்ந்தது. அவரை போலீசார் சிறையில் அடைத்தனர்.

மாணவியை கடத்திய பிறகு நரசிம் மன் கர்நாடக பதிவெண் கொண்ட மோட்டார்சைக்கிளிலேயே அவருடன் சுற்றித் திரிந்ததும் தெரிய வந்துள்ளது.

அந்த மோட்டார்சைக்கி ளில்தான், கேரளா, கர்நா டகா, ஆந்திரா, தெலுங் கானா, மகாராஷ்டிரா ஆகிய 5 மாநிலங்களிலும் மாணவியுடன் நரசிம்மன் உல்லாசமாக சுற்றி வந்துள் ளார்.

20 நாட்கள் மட்டுமே

அவர் சென்ற இடங்களில் எல்லாம், 3 நாட்கள் முதல் 20 நாட்கள் வரை மட்டுமே தங்கி உள்ளார்.

கடந்த ஒன்றரை ஆண்டு களாக அடிக்கடி இடத்தை மாற்றிக் கொண்டே, மாணவியுடன் அவர் குடும்பம் நடத்தியுள்ளார்.

செலவுக்காக திருட்டு

அப்போது குடும்ப செலவுக்காக நரசிம்மன் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார். இதுவரை 150 செல்போன்களையும், ஒரு மோட்டார் சைக்கிளையும் அவர் திருடி இருப்பதாக போலீசார் தெரிவித்துள் ளனர்.

கேமராக்கள்

நரசிம்மன் பைக்கில் சென்ற இடங்களில் தொடர்ந்து சோதனை நடத்திய போலீசார் டோல்கேட் உள்ளிட்ட 30 இடங்களில் பொருத்தப்பட்டிருந்த கேம ராக்களை ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். இதன் பிறகுதான் நரசிம்மனை கண்டுபிடிக்க முடிந்தது.

கேமரா பதிவுகள் மூலம் 150 சாட்சிகளிடம் விசா ரணை நடத்தி இறுதியாக நரசிம்மனை கைது செய்து இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

800 கிலோ மீட்டர்

நரசிம்மன், மாணவியை அழைத்துக் கொண்டு 800 கிலோ மீட்டர் தூரம் வரையில் மோட்டார் சைக்கிளிலேயே சுற்றி இருப்பது தெரிய வந் துள்ளது. சினிமா படங்களில் கதாநாயகன், கதாநாயகியுடன் பைக்கில் ஊர் ஊராக சுற்றி திரிவது போல நரசிம்மன் செயல்பட்டு உள்ளார்.

பெற்றோரிடம் ஒப்படைப்பு

கைதான நரசிம்மனை மீட்கப்பட்ட மாணவியையும் தர்மபுரி மகளிர் நீதி மன்றத்தில் போலீசார் ஆஜர் படுத் தினர். பின்னர், நீதிமன்ற உத்தரவின்பேரில் மாண வியை கைக் குழந்தையுடன் பெற்றோரிடம் ஒப்படைத் தனர். நரசிம்மன் தர்மபுரி கிளைச் சிறையில் அடைக்கப் பட்டார்.

ஆன்லைன் வகுப்புக்காக தங்களது பிள்ளைகளுக்கு வாங்கி கொடுக்கும் செல் போன்கள் தான் எந்த அளவுக்கு விபரீதத்தில் முடிந்துள்ளது என்பதற்கு தர்மபுரி மாணவியின் வாழ்க்கையே மேலும் ஒரு உதாரணமாக மாறி இருக்கிறது.

எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் ஆன்லைனில் என்னசெய்கி றார்கள் என்பதை கவ னிக்க வேண்டும். அப் போதுதான் இதுபோன்ற தவறான வழிகளில் அவர்கள் திசை மாறாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதே அனைவரின் கருத்தாக உள்ளது.

காதல் மன்னன் வலையில் மேலும் பெண்கள் சிக்கினார்களா?

போலீசார் ரகசிய விசாரணை

காதல் மன்னன் நரசிம்மன் போலீஸ் பிடியில் சிக்காமல் இருக்க மாணவியுடன் அடிக்கடி தனது இருப்பிடத்தை மாற்றியுள்ளார். சென்னையில் நீண்டநாட்கள் மாணவியுடன் தங்கியுள்ளார். அப்போது அவருக்கு செல்போன் மூலம் பணம் அனுப்பு உதவியவர்களிடமே ரூ.1.50 லட்சம் வரை அபேஸ் செய்துள்ளார். இதனிடையே நரசிம்மனின் வலையில் வேறு பெண்கள், மாணவிகள் யாரும் சிக்கி உள்ளார்களா? என்று போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்காக பெங்களூருவில் நரசிம்மன் தங்கி இருந்த பகுதியிலும் நரசிம்மனின் சொந்த ஊரான பொம்மி குப்பத்திலும் போலீசார் ரகசிய விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் கண்டிப்பதை மாணவர்கள் தவறாக எடுத்துக்கொள்ள கூடாது

அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி அறிவுரை

புதுக்கோட்டை, ஜன.17–

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பள்ளி கல்வி துறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி அமைச்சர்கள் ரகுபதி மற்றும் அய்யநாதன் ஆகியோர் கட்டிடத்தை திறந்து வைத்தனர். இதன் பின்னர் மாணவிகளிடம் அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி கலந்துரையாடினார்.

இதனை தொடர்ந்து நடந்த விழாவில் அமைச்சர் மகேஷ் பொய்யா மொழி பேசியதாவது:–

சமீபத்தில் நெல்லையில் நடந்த நிகழ்வு போன்று இனி தமிழகத்தில் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் கூடுதல் கட்டிடங்கள் தரமாக கட்டப்பட வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டுள் ளார்.

இதன் தொடர்ச்சியாகத் தான் தமிழகம் முழுவதும் 3,030 பழுதடைந்த பள்ளி கட்டிடங்கள் இடிக்கப் பட்டு உள்ளது. பள்ளி கட்டிடத்தின் முக்கியம் எவ்வளவு தரமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை மட்டும் தான் மக்களால் உற்று நோக்கப்படுகிறது. கொரோனா கால கட்டத்தில் மாணவர்களின் கற்றல் இடைவெளியை குறைக்க வேண்டும் என்பது தான் முதல்வரின் நோக்கமாக உள்ளது. இதற்காக தான் இல்லம் தேடி கல்வித்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு இருந்தாலும் கொரோனா தற்போது அதிகரித்து வருவதால் மனதளவில் மாணவ, மாணவிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக தான் தற்போது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வரும் 31–ந்தேதிக்கு பிறகு சூழ்நிலை எப்படி உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்து அதன் பின்னர் உரிய முடிவு எடுக்கப்படும். பொதுத்தேர்வு என்பது மிக, மிக முக்கியமான தேர்வு. அதனை கவனத்தில் கொண்டு மாணவ, மாணவி கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். இந்த வயதில் மாணவ, மாணவிகளின் கவனம் என்பது படிப்பில் மட்டுமே இருக்க வேண்டும் என்பது தான் முதல்வரின் எண்ணம். மாணவ, மாணவிகள் எந்தெந்த கல்லூரிகளில் சேர வேண்டும் என்று கவனமாக முதல்வர் செயல்பட்டு வருகி றார்.

படித்து முடித்த பிறகு நீங்கள் எப்படிப்பட்ட வேலையில் சேரவேண்டும் என்று கூட முதல்வர் பல்வேறு வகையில் திட்டமிட்டு வருகிறார். பெற்றோர்கள் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விழிப்புணர்வையும் அளிக்க வேண்டும்.

தமிழகத்திற்கு முதுகெலும்பு என்று கூறினால் அது மாணவிகள்தான். ஒரு வீட்டில் பையன் படிக்கிறான் என்றால் அது அந்த வீட்டிற்கு பாதுகாப்பாக இருக்கும். பெண்கள் படிக்கிறார்கள் என்றால் அந்த சமுதாயமே நன்றாக இருக்கும்.

அதேபோன்று ஆசிரியர்களும் மிகச்சிறந்த அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வருகின்றனர். ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளை கண்டிக்கிறார்கள் என்றால் அதை நீங்கள் தவறாக எண்ணக்கூடாது. ஆசிரியர்கள் தான் உங்களுடைய இரண்டாவது பெற்றோர்.

உங்கள் மேல் உள்ள அக்கறையால் தான் ஆசிரியர்கள் உங்களை கண்டிக்கின்றனர். எனவே ஆசிரியர்களை மதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முட்டைவிலை 10 காசுகள் சரிவு

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங் கிணைப்புக்குழு (என்.இ. சி.சி.) கூட்டம் அதன் தலைவர் டாக்டர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், ஏற்கனவே ரூ.4.60 ஆக இருந்த முட்டை விலை, 10 பைசா குறைக் கப்பட்டு, ஒரு முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ.4.50 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

முக்கிய நகரங்களில் ஒரு முட்டையின் விலை (பைசாவில்) வருமாறு:– சென்னை 4.75, பர்வாலா 4.67, பெங்களூர் 4.70, டெல்லி 4.85, ஹைதராபாத் 435, மும்பை 5.00, மைசூர் 4.65, விஜயவாடா 4.62, ஹொஸ்பேட் 4.30, கொல்கத்தா 5.15.

பொங்கல் பண்டிகை, தைப்பூசம் உள்ளிட்ட பண்டிகை எதிரொலியாக முட்டை விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. முட்டை விலை குறைவால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோழி விலை: பிராய்லர் கோழி உயிருடன் ஒரு கிலோ ரூ.100 ஆக பி.சி.சி.நிர்ணயித்துள்ளது. முட்டைக்கோழி ஒரு கிலோ ரூ.75 ஆக பண்ணையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

எம்.ஜி.ஆர். பிறந்தநாளையொட்டி சென்னை தி.நகரில் உள்ள புதிய நீதிக்கட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் மரியாதை செலுத்தினார்.

Macroeconomic situation on recovery mode, but India facing stagflation: Basu

BIJAY KUMAR SINGH
New Delhi, January 16

INDIA'S OVERALL MACROECONOMIC situation is in a recovery mode, but the growth is concentrated at the top end, which is a worrying trend, according to former World Bank chief economist Kaushik Basu. Amid the rising inflationary trends, including the sharp increase in retail inflation last month, Basu, who has also served as the chief economic advisor to the Indian government during the UPA rule, said the country is facing stagflation and "very carefully curated policy interventions" are required to address the situation.

Currently, Basu is a professor of Economics at the Cornell University in the United States.

While the aggregate economy is growing, "the bottom half of India" is in recession, he said and noted that it was sad the country's policy over the last few years has been largely focused on big businesses.

"India's overall macroeconomic situation is in recovery mode... The worry stems from the fact that this growth is concentrated at the top end," Basu told *PTI* in an interview. He also said the youth unemployment rate in the country touched 23%, among the highest globally, even before the COVID-19 pandemic started. Workers, farmers and small businesses are seeing negative growth, he added.

While India's GDP is estimated to grow 9.2% in 2021-22, Basu said since this comes after a contraction of 7.3% in 2019-20 due to the pandemic, the average growth rate over the last two years is 0.6% per annum. The National Statistical Office (NSO) in its first advance estimate has projected a GDP growth of 9.2% in April 2021 to March 2022 fiscal year while the Reserve Bank of India has forecast 9.5% expansion during the same period.

The World Bank has been the most conservative, projecting an 8.3% growth, while the Organisation for Economic Cooperation and Development (OECD) has pegged the GDP expansion at 9.7%.


Kaushik Basu

On whether the government should be going for fiscal consolidation or continue with stimulus measures in the Budget, Basu said the current situation in India is a big challenge to finance minister Nirmala Sitharaman and the entire fiscal policy apparatus.

The Indian economy is facing stagflation, which is much more painful and requires very carefully curated policy interventions, he said, adding that 15 years ago, inflation was even higher, close to 10%, but there was one big difference. "At that time, India's real growth was close to 9% ... so, even with the inflation, the average household was becoming better off per capita by 7 or 8%," he pointed out.

According to Basu, what makes the current situation so grim is that the near 5% inflation is occurring over a fall in real per capita income over the last two years. "Since this is a stagflation situation, the big task is to create jobs and help small business... the task now is to create jobs while at the same time increasing output," he observed.

Retail inflation rose to 5.59% in December 2021, mainly due to an uptick in food prices, while the wholesale price-based inflation bucked the 4-month rising trend and eased to 13.56% last month, as per latest official data. —PTI

Omicron: Not many got flight cancellation refund, says report

PRESS TRUST OF INDIA
Mumbai, January 16

LESS THAN ONE-third of the people who cancelled their flights owing to the emergence of the Omicron variant-led third pandemic wave were able to receive refunds, according to an online survey.

For those who were forced to cancel their hotel bookings on account of the same reason, 34% of people could get the refunds, online community platform Localcircles said in the survey.

The survey received more than 20,000 responses from citizens residing in 332 districts of India. The rapid rise in the Omicron variant-led Covid cases in India have prompted many citizens — who had travel booked during January-March — to revisit their plans, and a subset of them have also approached airlines and hotels for cancellations. The first question in the survey on airlines asked citizens, "For the flight travel that you had booked for January-March 2022, how did the cancellation process work?"

In response, 29% said, "Travel agent and/or airline accepted cancellation and refunded full amount", while 14% said they received partial amount."

At the same time, 29% of respondents said "travel agent and/or airline accepted cancellation and refunded a very small amount." About 14% of people surveyed said, "travel agent and/or airline did not refund anything but rebooked the ticket for a later date," and 14% couldn't say anything.

Metro Brands Q3 net profit jumps 55% to ₹101 crore

FOOTWEAR RETAIL CHAIN Metro Brands has reported a 54.63% jump in consolidated net profit to ₹100.85 crore for the third quarter ended December 2021. The company had posted a net profit of ₹65.22 crore during the October-December quarter of the previous fiscal, Metro Brands (MBL), earlier known as Metro Shoes.

Its total revenue from operations was up 59.02% at ₹483.77 crore during the quarter under review against ₹304.21 crore in the corresponding period of the previous fiscal. —PTI